இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in · நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி · murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 04 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 28 – வியாழக்கிழமை 13 ஆகஸ்ட் 2026 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 04 : Thiruvalluvar Year - 2057 - Aadi 28 - Thursday 13 August 2026 - Dak 10 Pages ₹ 5.00





நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களின் பெயரனும், 16 வயதிலேயே விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, பின்னர் மதுரை மாவட்ட ஆட்சியர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் முதல் தனிச் செயலாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்தவரும், நூறு வயதைக் கடந்தவருமான கே.லட்சுமிகாந்தன் பாரதி அவர்கள், நேற்று (12.08.2026), திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில், மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

அப்போது, அவரது பெயரன் டாக்டர் கமல் காந்தன் அவர்கள், "இனி வரும் விடியல்" என்ற தலைப்பில் தாம் எழுதிய கவிதையைக் கழகத் தலைவர் அவர்களிடம் வழங்கி மகிழ்ந்தார்.

# இனி வரும் விடியல்!



முன் தோன்றி பெயர் பெற்ற திருநாட்டில்
அறியாமை காரிருள் சூழ்ந்திடில்
போர் கண்ட சிங்கமாய்
சிலிர்த்திட்டு எழுந்திடுவாய்

யார் என்று தெரியாதவர்
முகமூடி அணிந்திட்டு
பாராள துணிந்திடவே
நன்மக்கள் நொந்திட்டார்

நம் கழகத்து ஆட்சியிலே
ஏற்றமடைந்த தமிழ்மக்கள்
மாற்றத்தை நாடிடவே
இன்று மிஞ்சியதோ ஏமாற்றம்

தந்திரமாய் செயல்பட்டு
எந்திரத்தில் இடம் பெற்று
திரையுலக மோகத்தில்
திடுக்கிட்ட இவ்வேளை
திக்கரியாது தமிழகம் நின்றிற்று

அறிவாலயச் சான்றோர்கள்
தீட்டிய ஒப்பற்ற திட்டங்களுக்கு
இன்று பெயர் மாற்றுவதே
ஒப்பனையாளர்களின் ஒரே திட்டம்

திரை இருளில் கண்ட காட்சிக்கு
எதிர்மறையாய் இன்று
தரணியிலே ஆட்சி
மக்கள் அவலமே அதற்கு சாட்சி

இருந்திடலாம் பல நிறத்தில் மின்விளக்கு
அதுவே ஜொலித்திடலாம் பல ரகத்தில் திரையுனுள்ளே
மின்சாரம் தடை பட்டால்
எஞ்சுவது இருள் மட்டும்

அஞ்சாதே உடன்பிறப்பே
இருள் நீங்க விடியல் வரும்
ஞாயிற்றைக் கைமறைப்போர்
கை விலக உதயமெழும்

கொள்கையில் இளநெஞ்சங்கள்
ஒன்று பட்டால்
சூழ்ந்திருக்கும் சூழ்ச்சி நீங்கி
சூழ்கடலும் வழிவிடும்

மண்டியிட்ட மனிதரெல்லாம்
மானத்தோடு மகிழ்ந்திடவே
இனமான இளஞ்சூரியன்
உதயன் என்றாகிடவே

மீண்டெழுவோம்
மீண்டும் வருவோம்
மீட்டெடுப்போம்
முத்தமிழ் காத்திட
முத்தமிழ் அறிஞர் வழியிலே..

**Dr. கமல் காந்தன்**
சவுதி அரேபியா
( திரு. கே.லட்சுமிகாந்தன் பாரதி அவர்களின் பேரன் )

## 'தொகுதி மறுவரையறை கொண்டு வரப்பட்டால் பெரிய ஆபத்து' என்று

# இந்தியாவுக்கே முதன் முதலாக சொன்ன இயக்கம் தி.மு.க.!

## சட்டப் பேரவையில் அரசின் தனித் தீர்மானத்தை வரவேற்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, ஆக. 13 -**

**"தொகுதி மறுவரையறை கொண்டு வரப்பட்டால் பெரிய ஆபத்து ஏற்படும் என்று இந்தியாவுக்கே முதன் முதலாக சொன்ன இயக்கம் தி.மு.க." என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டப் பேரவையில் நேற்று அரசின் தனித் தீர்மானத்தின் மீது உரையாற்றும்போது கூறினார்.**

சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -

தொகுதி மறுவரையறை என்கிற பேரில், எக்காரணம் கொண்டும் நம் தமிழ்நாடு பாதிக்கப்படக்கூடாது என்பதுதான் எங்களின் உறுதியான நிலைப்பாடு.

தற்போதைய மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், புதிதாகத் தொகுதி மறுவரையறையைக் கொண்டு வந்தால், அது எவ்வளவு பெரிய ஆபத்தாக அமையும் என்பதை, இந்தியாவுக்கு முதன்முதலாகச் சொன்ன இயக்கம்,



எங்களின் திராவிட முன்னேற்றக் கழகம், எங்களின் தலைவர் அவர்கள்தான்.

இந்த விஷயத்தில், எங்களின் கழக அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளை, இங்கு பேசிய அமைச்சர் பெருமக்கள் உட்பட, பலரும் இங்கே பதிய வைத்துள்ளார்கள். இருந்தாலும், சில நடவடிக்கைகளை இங்கே பதிய வைக்க விரும்புகிறேன்.

### 2024-ஆண்டு இதே பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியவர் எங்கள் தலைவர்!

தொகுதி மறுவரையறை என்று சொல்லி, தமிழ்நாட்டு எம்.பி.க்களின் எண்ணிக்கையைக் குறைக்க அனுமதிக்க மாட்டோம். தமிழ்நாட்டுக்கு தற்போதுள்ள விகிதாச்சாரம் குறையக் கூடாது என்று, இதே சட்டமன்றத்தில், 2024ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தீர்மானத்தை நிறைவேற்றியவர் எங்கள் கழகத் தலைவர், அப்போதைய முதலமைச்சர் அவர்கள்.

பிறகு, சென்ற ஆண்டு பிப்ரவரி 2ஆம் தேதி இது தொடர்பாக, ஒரு அமைச்சரவைக் கூட்டத்தையும் எங்கள் தலைவர் அவர்கள் கூட்டினார்கள். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் சென்ற ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் தேதி, எங்கள் தலைவர் தலைமையில், ஓர் அனைத்துக் கட்சிக் கூட்டமும் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில் இங்கு இருக்கின்ற நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள், அவர்களின் இயக்கத்தின் சார்பாக கலந்துகொண்டு, அவரின் கருத்துகளை அங்கே பதிய வைத்துள்ளார்.

அதன் பிறகு மார்ச் 7ஆம் தேதி, தொகுதி மறுவரையறையின் ஆபத்தை விளக்கி, தென் மாநிலங்கள் உட்பட 7 மாநில முதலமைச்சர்களுக்கும், அந்தந்த மாநிலங்களைச் சேர்ந்த முக்கியமான அரசியல் கட்சி தலைவர்கள் அனைவருக்கும் எங்களின் தலைவர், அப்போதையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக, ஒரு கடிதத்தையும் எழுதி இருந்தார்.

பின்பு மார்ச் 22ஆம் தேதி 'ஃபேர் டி லிமிட்டேசன்' என்ற தலைப்பில், 5 மாநில முதலமைச்சர்கள் மற்றும் இந்தியாவின் மிக முக்கியமான 10க்கும் அதிகமான கட்சிகளைச் சேர்ந்த முக்கிய தலைவர்களைக் கொண்டு ஒரு 'ஜாயின்ட் ஆக்சன் கமிட்டி' கூட்டத்தை எங்கள் தலைவர் அவர்கள் சென்னையில் நடத்தினார்கள்.

அந்தக் கூட்டத்தில் இந்தத் தொகுதி மறுவரையறையின் பாதிப்புகளை, நான்தான் பிரசென்ட்டேசனாகக் கொடுத்தேன். 2026ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில், எம்.பி. தொகுதிகளை நிர்ணயித்தால், தென் மாநில எம்.பி.க்களின் எண்ணிக்கை குறைந்துவிடும். அதே நேரம் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தாத வட மாநிலங்களில் உள்ள எம்.பி.க்களின் தொகுதிகள் அதிகரித்து விடும்.

### 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பே தொடர வேண்டும்!

எனவே, தொகுதி மறுவரையறைத் திட்டத்தை, அடுத்த 25 ஆண்டுகளுக்கு நடத்தக்கூடாது, நிறுத்தி வைக்க வேண்டும். 1971ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படியே, மக்களவைத் தொகுதிகள் தொடர வேண்டும் என்று பிரசென்டேசனில் நான்தான் விளக்கிக் கூறினேன். அதுவே அந்த 'ஜாயிண்ட் ஆக்சன் கமிட்டி' கூட்டத்தில் முக்கிய

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்